# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/22 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

*2086/22 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**3 ஆம் திருத்தம்**

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*2013, திசெம்பர் 23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2015, யூலை மாதம் 16 ஆந் திகதிய 1923/47 ஆம் இலக்க 2016, ஓகத்து 11 ஆந் திகதிய 1979 /33 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு, இலக்கம் அப/17/2814/702/067-1 மற்றும் 2018.03.20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2018, ஓகத்து 20.*

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.3 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

*13.3 சேவையின் முதலாம் (I) தரத்தில் இருந்து விசேட தரத்துக்கு பதவியுயர்த்தல்*

*13.3 (அ) பூர்த்தி செய்திருக்க வேண்டிய தேவைப்பாடுகள்*

(i) அவ்வாறே நிலவும்.

(ii) **பதவியுயர்த்தப்படும் திகதிக்கு** சேவையின் முதலாம் (I) தரத்தில் ஐந்து வருடங்கள் (05) முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் முதலாம் (I) தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் சம்பள ஏற்றங்கள் ஐந்தினைப் (05) பெற்றிருத்தல்.

1A - G 28387 — 08 (2018/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) **பதவியுயர்த்தப்படும் திகதிக்கு** சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு ஏற்ப **பதவியுயர்த்தப்படும் திகதிக்கு** உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது உயர் மட்டத்தில் அமைந்திருத்தல்.

(v) **பதவியுயர்த்தப்படும் திகதிக்கு** உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்பட்டிராதிருத்தல்.

(vi) III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை உரிய திகதியில் பூரணப்படுத்தியிருத்தல்.

13.3 (ஆ) பதவியுயர்த்தப்படும் முறை

அவ்வாறே நிலவும்.

9 - 337

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.